பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : கார்த்திகை 25 (10—12—68) செவ்வாய் ★ வெளியூர் : கார்த்திகை 26 (11—12—68) புதன் [இதழ் : 146

## இந்தியாவுக்கு ஜப்பான் உதவி

டோக்கியோ, டிச. 10—
அனைத்து நாட்டுக் கோதுமை ஒப்பந்தத்தின்கீழ் நடப்பு நிதி ஆண்டில் 162 மிலியன் டாலர் (சுமார் ரூ. 1.2 கோடி) மதிப்புக்கு உணவு உதவி மானியம் வழங்குவது என்று ஜப்பான் முடிவு செய்துள்ளது.

இந்தியாவுக்கு ஜப்பான் உணவு உதவி மானியம் வழங்குவது இதுவே முதல் முறையாகும்.

# பிர்லா பெற்ற கொள்ளை இலாபம்

## நான்காண்டுகளில் ரூ. 144.8 கோடி

### கணக்குத் தருகிறார் மத்திய அமைச்சர்

புதுடில்லி, டிச. 9 —
பிர்லாவின் சொத்து மதிப்பு 1963—64-க்கும் - 1966—67-க்கும் இடையே நான்காண்டுக் காலத்தில் ரூ. 144.8 கோடி அதிகரித்திருக்கிறது.

தொழில் வளர்ச்சித் துறையமைச்சர் திரு. பக்ருதின் அகமது நாடாளுமன்ற மேலவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

பிர்லாவுக்குச் சொந்தமான நிறுவனங்களின் சொத்து மதிப்பு 1963— 64-ல் ரூ. 292.9 கோடியாக இருந்தது ; அது இப்போது ரூ. 437.5 கோடியாக -- அதாவது 49 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

இந்தியாவின் மிகப் பெரிய 8 தொழில் நிறுவனங்களின் சொத்து விவரங்களை அமைச்சர் வெளியிட்டார்.

மேற்சொன்ன காலத்தில் டாட்டாவின் சொத்து மதிப்பு உயரவில்லை.

டாட்டாவுக்கு 1963 — 64-ல் ரூ. 417.7 கோடி சொத்து இருந்தது ; அது 1966—67-ல் ரூ. 416.3 கோடியாயிற்று.

மற்றுமுள்ள தொழிலதிபர்களின் சொத்து மதிப்பீடுகள் 1963—64 கணக்குப்படி வருமாறு :—

சாகு ஜெயின் ரூ. 67.7 கோடி.

மபட்லால் ரூ. 149.6 கோடி.

லார்சன் அண்ட் தௌப்ரோ ரூ. 12.1 கோடி.

பேர்டு ஹெய்ஜர்ஸ் ரூ. 45 9 கோடி.

காமனிஸ் ரூ. 60.1 கோடி.

ஜே. கே. சிங்கானியா ரூ. 59.2 கோடி.

1956-ஆம் ஆண்டில் கம்பெனிகள் சட்டம் செயல்படுத்தப்பட்டதிலிருந்து: மேற்சொன்ன நிறுவனங்களின் சொத்து மதிப்பில ஏற்பட்ட உயர்வு விகிதம் வருமாறு :—

பிர்லா 5 5 சதவிகிதம ; மபட்லால் 2.7 சதவிகிதம், லார்சென் அண்டதௌப்ரோ 0.2 சதவிகிதம் ; பேர்டுஹெய்ஜர்ஸ் 1.2 சதவிகிதம் ; காமனிஸ் 1 சதவிகிதம் ; சிங்கானியா 1 சதவிகிதம்.

இந்த நிறுவனங்களின் மொத்த சொத்து மதிப்பீடு ரூ 709 5 கோடி.

# வெளிநாட்டு முதலீட்டில் வீழ்ச்சி!

## மொரார்ஜி தகவல்

புதுடில்லி, டிச. 10 —
இந்தியாவில், வெளிநாட்டுத் தனியார் துறையினர் முதலீடு செய்வது பெருமளவில் வீழ்ச்சி யடைந்துள்ளது !"

1963 – 64-ல் ரூ. 67-90 கோடி வெளிநாட்டினர் இந்தியாவில் முதலீடு செய்திருந்தனர்; இத்தொகை 1967-68-ல் ரூ. 22 - 30 கோடியாகக் குறைந்துள்ளது.

இத்தகவலை, நாடாளுமன்ற மேலவையில், துணைத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"இந்தியாவில் போடப்படும் வெளிநாட்டு மூலதனம் 'பயங்கர பூத'மாகக் கருதப்படுகிறது என்று அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளது பற்றி அரசுக்குத் தகவல் இல்லை"

என்று, திரு. லோபோ பிரபுவின் கேள்விக்கு மொரார்ஜி பதிலளித்தார்.

# இலட்சக்கணக்கில் பணம் செலவான விவரம்

## 18 மாத காலத்தில் 1,600 அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தனராம்

கடந்த 1967 சனவரி முதல் 1968 சூன் முடிய 18 மாத காலத்தில் இந்திய அரசின் பல்வேறு அமைச்சுத் துறைகளையும் சேர்ந்த அதிகாரிகள் 1,600 பேர்வரை வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருக்கின்றனர் !

தனிப்பட்ட முறையில் பயணம் சென்ற அரசு அதிகாரிகளின் எண்ணிக்கை இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை. அந்தக்கணக்கு ரிசர்வ் பாங்கிக்குத்தான் தெரியும். அத்தகைய பயணம் சென்றோர் பட்டியல் எதனையும் அரசு வைத்துக்கொள்வதில்லை.

பல்வேறு தொழில் நுணுக்கத் திட்டங்களின் கீழ் ஏராளமான அதிகாரிகள் வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப் பட்டிருக்கின்றனர்.

வணிக அமைச்சுத் துறைதான் மிக அதிகமானவர்களை--அதாவது, 18 மாத காலத்தில் 261 பேர்களை--வெளிநாடுகளுக்கு அனுப்பியிருக்கிறது ; இதற்காக ஏற்பட்ட செலவு கிட்டத்தட்ட ரூ. 44 இலட்சமாகும்.

வெளிநாட்டு அமைச்சுத் துறையினால் 247 பேர் அனுப்பப் பட்டனர் ; அவர்களுக்காக ரூ. 19 56 இலட்சம் செலவாயிற்று.

பாதுகாப்புத்துறை அமைச்சகம் 203 அதிகாரிகளை அனுப்பி ரூ 12.33 இலட்சம் செலவிட்டிருக்கிறது.

அணுசக்தித் துறையினால் 125 அதிகாரிகள் அனுப்பப்பட்டு ரூ. 9 25 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

**பல்வேறு துறைகள் வெளிநாடுகளுக்கு அதிகாரிகளை அனுப்பி வைத்ததன் மூலம் ரூ. 1.30 கோடி செலவிடப்பட்டுள்ளது.**

# 'வசதிகளைப் பெருக்காமல் மேலும் வரிகளைப் போடுவது நீதியாகாது'

## 'நடுத்தரமக்களை வாட்டிப்பிழிவதற்கு இனியும் இடம் ஏற்படக் கூடாது'

## 'நேர்மைமிக்க ஒன்றுகவே பரிசுச் சீட்டுத் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறோம்'

### 'கிடைக்கும் இலாபம் சமுதாய நலனுக்குப் பயன்படுத்தப்படும்'--- முதலமைச்சர் அண்ணா தெளிவுரை

சென்னை, டிச. 10—
"நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்பச் செலவினங்களும், மக்களின் தேவைகளும் பெருகி வருகின்றன ; செலவினங்கள் பெருகி வருவதற்கு ஏற்ப வருவாய்க்கு வழியில்லை ; இன்னும் வரி போட முடியாத அளவுக்கு வரிச் சுமைகள் ஏற்கனவேயே இருக்கின்றன.

"வருவாய்ப் பெருக்கத்திற்கு மேற்கொண்டு வரிகள் போடுவது என்றால், அது, நடுத்தர மக்களை மேலும் வாட்டிப் பிழிவதற்கு ஒப்பாகும். ஆகவே, சமுதாயத் திற்குச் செய்யவேண்டிய வசதிப் பெருக்கங்களுக்காக நிதி தேடத் தமிழக அரசு, பரிசுச் சீட்டுத் திட்டத்தை ஒரு சிறந்த -- நேர்மையான வழியாகக் கொண்டிருக்கிறது.

"பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து அரசுக்குக் கிடைக்கும் தொகையில், இன்னும் பெரிய அளவில் மருத்துவமனைகள் கட்டவும், மருத்துவ வசதியைப் பெருக்கவும், பள்ளிக் கட்டிடங்களை அமைக்கவும், ஆசிரியர்களின் நலனை மேம்பாடு செய்யவும் பயன்படுத்தக்கூடும் ; சமுதாயத்திற்கு நல்ல காரியங்களைச் செய்யவே இதனால் கிடைக்கும் இலாபம் பயன்படுத்தப்படவிருக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், பரிசுச் சீட்டுத் திட்டத்தின் இரண்டாவது குலுக்கலில் முதலிரண்டு பரிசுக்குரியவர்களுக்குப் பரிசு வழங்கிப் பேசுகையில் தெளிவுபடுத்தினார்கள். மேலும் அவர், இது தொடர்பாக விளக்கிக் கூறியதாவது :--

"பரிசு பெற்றவர்கள், தங்களது குடும்பங்களின் நிலையை உயர்த்திக் கொள்வதற்கு இத்தொகை பயன்படும் ; பரிசுச் சீட்டுத் திட்டம் இல்லையென்றால், அது இயலாமற்போயிருக்கும்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துக் கூறும் நேரத்தில் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் —பரிசாகப் பெறுகின்ற பெருந் தொகையை ஆடம்பரமாகத் திருமணங்களிலும், திருவிழாக்களிலும் வீணாகச் செலவழித்து விடாமல் மேலும் அச்செல்வம் கூடுகின்ற வகையில், தொழில் திட்டங்களில் அப்பணத்தை முதலீடு செய்வது சாலச் சிறந்ததாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

### அண்ணா சிகிச்சை நிதி

## அமைச்சர்கள் காணிக்கை

கழகப் பொருளாளர் அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப, அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காக தமிழக அமைச்சர்கள் அனைவரும் தத்தமது ஒரு மாதச் சம்பளத்தை அளித்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| அமைச்சர் | இரா. நெடுஞ்செழியன் | 500.00 |
| ,, | மு. கருணாநிதி | 500.00 |
| ,, | கே. ஏ. மதியழகன் | 501.00 |
| ,, | சத்தியவாணிமுத்து | 500.00 |
| ,, | ஏ. கோவிந்தசாமி | 501.00 |
| ,, | சே. மாதவன் | 500.00 |
| ,, | எஸ். ஜே. சாதிக் பாட்சா | 500.00 |
| ,, | எம். முத்துசாமி | 501.00 |

# ஒழுங்கீனமாக நடந்துகொண்ட பரிசுச் சீட்டு ஏஜெண்டுகள்

## ஒருவர் நீக்கம் --- ஐவர்மீது நடவடிக்கை

சென்னை, டிச. 10—
பரிசுச் சீட்டு விற்பனையில் ஒழுங்கீனங்களைத் தடுக்கச் சென்னைக் கலெக்டர் எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஒரு நபரின் ஏஜென்சி உரிமை ரத்துச் செய்யப்பட்டது ; மற்றும் ஐவரின் ஏஜென்சி உரிமைகள் நிறுத்தி வைக்கப்பட்டன.

பரிசுச் சீட்டுக்களை அதிக விலைக்கு விற்பது--வேண்டியவர்களுக்கு மட்டும் தருவது போன்ற ஒழுங்கீனங்கள் நடைபெற்றதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

### விற்பனை ஒரு நாள் நீட்டிப்பு

அரசுக் கருவூலங்களில் ஏஜெண்டுகளுக்குப் பரிசுச் சீட்டுக்கள் விற்பதற்கு டிச. 13 கடைசி நாள் என்றிருந்ததை, டிச. 14-ம் நாள் வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

இனி, எல்லா வரிசைப் பரிசுச் சீட்டுக்களும் ஒரே நிறத்தில் அச்சிடப்படும்.

நம் நாடு
இரா. செழியன்
திருவள்ளுவராண்டு 1999 கார்த்திகை 25 (10–12–68) செவ்வாய்

# புதுச்சேரி தேர்தல்-- நமது வேண்டுகோள்

[2]

இத்திங்கள் 16-ம் நாள் நடைபெறவிருக்கின்ற பாண்டிச்சேரி -- காரைக்கால் நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துவருகிறது. வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்து அவர்களுடைய ஆதரவைக் கோருவதில் நகர நலக் கூட்டு முன்னணியைச் சேர்ந்த வேட்பாளர்களும், காங்கிரசு வேட்பாளர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இங்குள்ள கழக அமைப்பும், பொதுவுடைமைக் கட்சியும், நகராட்சித் தேர்தலில் தனித் தனியாகக் காங்கிரசுக் கட்சியை எதிர்த்திடக்கூடும் என்று, அங்குள்ள அக்கட்சியின் தலைவர்கள் எதிர்பார்த்தனர். தாங்கள் எதிர்பார்த்திருந்தபடி, தனித் தனியாகக் கழகமும், பொதுவுடைமைக் கட்சியும் தேர்தலில் பங்கு கொள்ளும்பட்சத்தில், ஒவ்வொரு தொகுதியிலும் மும்முனைப் போட்டி ஏற்படக்கூடும் -- அதன் விளைவாகக் காங்கிரசு எதிர்ப்பு வாக்குகள் சிதறக்கூடும் -- அப்பொழுது காங்கிரசுக் கட்சி வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு தானாக உருவெடுத்துவிடும் -- என்ற கற்பனையில், அங்குள்ள காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் மூழ்கி மகிழ்ந்திருந்தனர்.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்திருந்தபடி நிகழ்ச்சிகள் உருவாகவில்லை; அதற்கு மாறாக, கழகமும் -- பொதுவுடைமைக் கட்சியும் கூட்டாக இணைந்து, 'காங்கிரசுக் கடசியைத் தேர்தலில் முறியடிப்பது' என்ற சிறந்த முடிவுக்கு இரண்டு அமைப்புக்களும் வந்துவிட்டன.

இம்முடிவு, காங்கிரசுக் கட்சித் தலைவர்களுக்கு அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஒருங்கே ஏற்படுத்திவிட்டது. இதன் பலனாக, துவக்கத்தில் காங்கிரசுக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிட விரும்பியவர்களும், ஒப்பியிருந்தவர்களும், அக்கட்சி சார்பில் போட்டியிட முடியவே முடியாது என ஒதுங்கிக்கொண்டனர்.

காங்கிரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட விரும்பியவர்களும் -- ஒப்பியிருந்தவர்களும், தங்களால் தேர்தலில் போட்டியிட முடியாது எனத் திட்டவட்டமாக மறுத்துவிட்டதும், தேர்தலில் காங்கிரசுக் கட்சியின் சார்பில் யாரை நிறுத்துவது என்ற குழப்பமும் கவலையும் காங்கிரசுக் கட்சித் தலைவர்களைப் பற்றிக்கொண்டது. காங்கிரசுக் கட்சி வேட்பாளராக யாரை நிற்கும்படிக் கேட்டாலும், அவரிடமிருந்து, 'முடியாது' என்ற மறுப்புத்தான் பதிலாகக் கிடைத்தது.

தொகுதிகள் அனைத்திலும்—அதிலும் குறிப்பாகப் பாண்டிச்சேரி நகராட்சித் தொகுதிகளில், எப்படியாவது காங்கிரசுக் கட்சியின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தித் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொண்டால், அதுவே தாங்கள் பெறக்கூடிய மாபெரும் வெற்றியாகும் என்ற தீர்மானத்றுக்கு அங்குள்ள காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் வரவேண்டியவர்களாயினர். வலைவீசி ஆளைப் பிடித்து -- புதிதாகத் தைத்த கதர்ச் சட்டையை மாட்டி -- 'காங்கிரசுக் கட்சியினர்' எனப் பெயர் சூட்டி -- காங்கிரசு வேட்பாளர்களாக நிற்க வைப்பதில் இறுதியாகக் காங்கிரசுத் தலைவர்கள் வெற்றி பெற்றுவிட்டனர். இரண்டொரு தொகுதிகள் நீங்கலாக, பாண்டி நகராட்சிக்கான மற்ற தொகுதிகளில் காங்கிரசு வேட்பாளர்களாக இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருகின்றவர்கள் அனைவரும், இந்தத் தேர்தலுக்கென்று மட்டுமே காங்கிரசுச் சட்டைக்குள் புகுத்தப்பட்டிருப்பவர்களாவர்.

'பாண்டி நகராட்சித் தொகுதிகள் அனைத்திலும் வேட்பாளர்களை நிறுத்திவைப்பது ஒன்றே பெறுவதற்கரிய பெரும்பேறு' என்ற கருத்தில், காங்கிரசுக் கட்சியின் பெயரால் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றவர்களிடம் வாக்காளர்களுக்கு நம்பிக்கையோ, அவர்களை ஆதரிக்க வேண்டும் என்ற நல்லெண்ணமோ ஏற்பட முடியுமா? 'ஏற்பட முடியாது' என்ற உண்மை, அவர்களை வேட்பாளர்களாக நிறுத்திவைத்திருக்கின்ற காங்கிரசுத் தலைவர்களுக்கும் தெளிவாகத் தெரியும். 'ஏதோ, கட்சியின் பெயரால் வேட்பாளர்களை நிறுத்துவதிலாவது வெற்றி பெற்றுவிட்டோமே' என்ற மனநிறைவையும் மகிழ்ச்சியையும் அங்குள்ள காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் பெற்றுவிட்டதில், மற்றவர்களுக்கு அழுக்காறு கொள்ளுவதற்கு இடமேது?

பாண்டியில் காங்கிரசுக் கட்சிக்கு உயிரூட்டி செல்வாக்குத் தேடித்தந்த குபேர், பரூக் போன்ற தலைவர்கள், வலதுசாரிப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் சுப்பையா அவர்களுடன் இணைந்து, 'நகர நலக் கூட்டு முன்னணி'யை அமைத்திருக்கின்றனர். முன்னணியில் தலைவர் பொறுப்பை, 'புதுவை அரசியலில் பழுத்த பழம்' எனக் கொள்ளத்தக்க குபேர் அவர்கள் ஏற்றுள்ளார்கள். அம்முதியவருக்கு ஊக்கமும் ஆர்வமும் ஊட்டிவருபவராக அங்கு முன்னாள் முதலமைச்சராக இருந்த பரூக் அவர்கள் பணியாற்றி வருகின்றார்.

அவர்கள் இருவரும் இப்பொழுது முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களாவர். இத்துடன் முன்னேற்றக் கழகம் துவங்கிய நாள்தொட்டும், அதற்கு முன் திராவிடர் கழகமாகச் செயல்பட்டு வந்த நாளிலும், கழக வளர்ச்சிக்குத் தங்கள் உழைபபைத் தந்துள்ள --- இப்பொழுதும் தந்துகொண்டிருக்கின்ற வழக்கறிஞர் **பெருமாள்** அவர்களும், 'புதுவைச் சிவம்' என்று அழைக்கப்படுகின்ற **சிவப்பிரகாசம்** அவர்களும், வேறு சில குறிப்பிடத்தக்க கழகத் தோழர்களும், முன்னணியின் சார்பில் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர். அவர்கள்பால் பெரும்பாலான வாக்காளர்கள் காட்டிவருகின்ற பரிவும் பற்றும், அவர்கள் அனைவரும் தேர்தலில் வெற்றி பெறுவர் என்ற நம்பிக்கையைத் தருகின்றன.

பாண்டிச்சேரி --- காரைக்கால் பகுதியைச் சேர்ந்த மக்கள், காங்கிரசுக் கட்சியின் கடந்தகால அரசியல் அலங்கோலத்தைக் கண்டு கண்டு, அக்கட்சியின்மீது வெறுப்பும் சலிப்பும் அடைந்துள்ளனர்.

எனவே, காங்கிரசுக் கட்சிக்குத் தக்க பாடம் கற்பிக்கக்கூடிய வாய்ப்பை, அவர்கள் நீண்ட நெடுநாட்களாகவே எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த வாய்ப்பு இப்பொழுது, நகராட்சிமன்றங்களுக்கான தேர்தலாகக் கிடைத்திருக்கிறது. இதுபோன்றே இன்னும் சரியாக 60 நாட்கள் கழித்து, சட்டப் பேரவைக்கான தேர்தல் மூலம், இதைவிடப் பெரியதும் அரியதுமான வாய்ப்பு அவர்களை நோக்கி விரைந்து வந்துகொண்டிருக்கிறது.

இந்த நகராட்சி மன்றங்களுக்கான தேர்தலில், காங்கிரசுக் கட்சிக்கு, அந்த வாக்காளர்கள் தரக்கூடிய சம்மட்டி அடி, சட்டப் பேரவைத் தேர்தலில் தலைகாட்டவே துணிவு பெறமுடியாத நிலையைக் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்படுத்துவதாக அமைந்திட வேண்டும். இதுவே, அங்குள்ள வாக்காளர்களுக்கு நாம் விடக்கூடிய வேண்டுகோளாகும். இவ்வேண்டுகோளை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்பதில் நமக்குத் திடமான நம்பிக்கை உண்டு.

— கா. க.

# நாட்டுக்கு நாடு சனநாயகத்தில் வேறுபாடு!

## பழமையை விட்டுவிடாமலே முன்னேறுகிறது பிரிட்டன்!

★

## மேலை நாடுகளையே அஞ்ச வைக்கிறது ஜப்பானின் தொழில் வளர்ச்சி

### வெளிநாட்டு அனுபவம் --- பேராசிரியர் அன்பழகன் கருத்துரை

சென்னை, டிச. 9—

"மேலைநாடுகள் என்பதாலேயே, அவை எல்லாத் துறைகளிலும் மேம்பட்டவை என்பதுமல்ல! கீழை நாடுகள் என்பதாலேயே அவை எல்லாத் துறைகளிலும் தாழ்ந்து கிடக்கின்றன என்பதுமல்ல!

"மேலைநாட்டினர் பெற்றிருக்கின்ற புற வளர்ச்சியின் அளவுக்கு அக வளர்ச்சி பெறவில்லை! நாம், பெற்றிருக்கின்ற அக வளர்ச்சியின் அளவுக்குப் புற வளர்ச்சி அடையவில்லை"

என்று, நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கருத்தறிவித்தார்.

நண்பர்கள் குழுச் சார்பில், சென்னை உட்லண்ட்ஸ் விடுதியில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அவர் மேலும் கூறியதாவது:—

"நான், வெளிநாடு செல்ல வேண்டும் என்பதற்காக இந்தப் பயணத்தை மேற்கொள்ளவில்லை. அமெரிக்காவுக்கு அருகிலுள்ள பகாமா தீவில் கூடிய காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது; நான், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவனாக இருப்பதால், என்னை ஒரு பிரதிநிதியாகக் கலந்துகொள்ளுமாறு மக்களவைத் தலைவர் திரு. சஞ்சீவியார் பணித்தார்; நண்பர் இராசாராம் போன்றவர்களும் என்னைத் தூண்டினார்கள்; அந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்ததால், 'நாமும் அண்ணாவைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும்' என்ற மகிழ்ச்சியில் அந்த மாநாட்டில் கலந்துகொள்ள ஒப்புக்கொண்டு புறப்பட்டேன்.

நான் சுற்றுப்பயணம் செய்து பல நாடுகளைக் கண்டதில் அடைந்த மகிழ்ச்சியைவிட, அறிஞர் அண்ணா அவர்களைக் கண்டு அவர்களுடன் 15 நாட்கள் தங்கியிருக்கும் வாய்ப்புக் கிடைத்ததில்தான் பெருமகிழ்ச்சி கொண்டேன்.

நான் சென்ற வழியே திரும்பினாலும் -- உலகின் மறுபுறமாக வந்தாலும் -- தொலைவும் செலவும் ஒன்றே என்பதால், சென்ற வழியே திரும்பாமல் வேறு வழியே திரும்பி -- ஜப்பான், சிங்கப்பூர் வழியாகத் தாயகம் வந்து சேர்ந்தேன். இதன் காரணமாக என் பயணம் உலகப் பயணமாயிற்று.

**நான் சென்ற வழியில் இருந்த நாடுகளெல்லாம் சனநாயக நாடுகள்தான்; ஆனாலும், ஒவ்வொரு நாட்டிலும் செயல்படும் சனநாயக முறைகளில் மாறுபாடு — வேறுபாடுகள் இருக்கக் கண்டேன்.**

சனநாயகம் வளர்ந்துள்ளதாகக் கூறப்படும் அமெரிக்காவில் நடந்த தேர்தலையும் நேரில் கண்டேன்.

நாடாளுமன்ற முறை ஈன்றெடுத்து உலகுக்கு வழங்கிய பீடமாக மதிக்கப்படும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திற்கும் சென்று பார்த்தேன்.

சர்வாதிகார நாடுகளுக்கு நான் செல்லவில்லையேதவிர, ஒரே கட்சியை வைத்துக்கொண்டு சனநாயகம் நடத்தும் சிங்கப்பூரையும் கண்டேன்.

அமெரிக்காவில் சனநாயகம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்று சொல்லப்பட்டாலும், அங்கு நடைபெற்ற தேர்தலிலும் சிலரிடை அதிருப்தி நிலவுகிறது.

குடியரசுத் தலைவர் தேர்தலில், 'மக்கள் வாக்கு' என்றும், 'மாநிலங்களின் வாக்கு' என்றும் இரண்டுவித வாக்குகள் தேவையில்லை என்றும், இதனால் பல இடையூறுகள் ஏற்படுகின்றன வென்றும், எனவே தேர்தல் முறையில் சில மாறுதல்கள் தேவை என்றும் அங்கு சிலர் கருதுகிறார்கள்.

பிரிட்டனில், பழைய சம்பிரதாயங்களையும், பழக்கவழக்கங்களையும் விட்டுவிடாமல் அப்படியே வைத்துக்கொண்டே, முன்னேற்றம் பெற்றிருக்கின்றனர். எடுத்துக்காட்டுகளுக்கு கூறவேண்டுமானால், பிரிட்டிஷ் நாடாளுமன்றம் கூடும் மண்டபத்தில் 250 பேருக்குமேல் அமர முடியாது; ஆனால் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 500 பேர் இருந்தும்கூட அந்தப் பழைய மண்டபத்தையே பயன்படுத்துகிறார்கள்.

நாடாளுமன்றம் ஏற்பட்ட அந்தக் காலத்தில் இருந்த நாற்காலிகள், மேசைகள் மாற்றப்படாமலேயே இருக்கின்றன. அவற்றைக் காலத்துக்கேற்ப அழகுபடுத்துகிறார்களே தவிர, அடியோடு மாற்றுவதில்லை.

ஒரே நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் கூட்டத்துக்கு வந்துவிட்டால் பாதிபேர் நிற்க வேண்டியதுதான்.

இந்த வகையில் அவர்கள், 'பழமை விரும்பி'களாக இருந்துகொண்டே முன்னேற்றமும், கண்டு வருகிறார்கள்!

பிரான்சு நாட்டில், எல்லோரும், 'தங்கள் தாய்மொழியே மிகச் சிறந்த மொழி' என்று மதிக்கிறார்கள்; நாம் ஆங்கிலத்தில் பேசினால் அவர்கட்குப் பிடிப்பதில்லை. ஆங்கிலத்திலோ வேறுமொழியிலோ பேசுபவர்களையும் அவர்கள் வெறுக்கிறார்கள்; வேறு வழியின்றி நம்முடன் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள்.

அதேபோல் வேல்ஸ் நாட்டில் உள்ளவர்கள், அண்டை நாட்டு மொழியான ஆங்கிலத்தை எதிர்த்துத் தங்கள் தாய்மொழிக்கு உயர்வு வேண்டுமென்று போராடி வருகிறார்கள்.

நான் சென்ற நாடுகளிலேயே என்னைக் கவர்ந்த நாடு ஜப்பான்தான்! தொழில் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும், அது மேலை நாடுகளுடன் போட்டியிடக்கூடிய அளவுக்கு முன்னேறியுள்ளது!

அதன் வளர்ச்சியைக் கண்டு அமெரிக்காவே அஞ்சுகிறது!

அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட எந்த நாடும் இன்று தொழில் துறையில் ஜப்பானுடன்போட்டியிடக்கூடிய நிலை இல்லை; 'மேற்கு ஜெர்மனி மட்டும்தான் போட்டியிட முடியும்' என்று கூறப்படுகிறது.

அமெரிக்காவில் உள்ள உலகிலேயே மிக உயர்ந்த வானளாவிய கட்டிடமான 'எம்பயர் ஸ்டேட்' கட்டிடத்தின் மேல் ஏறிப் பார்த்தேன். அதிலிருந்து கீழே இறங்கி வந்தபோது, அந்தக் கட்டிடத்தைப் போன்றே சிறிய பொம்மை ஒன்று விற்பதைக் கண்டு—நான் சென்று வந்ததன் நினைவாக அதனை வாங்கினேன்; அது, ஜப்பானில் செய்யப்பட்டதாகத்தான் அதில் எழுதப்பட்டிருந்தது!

வானளாவிய கட்டிடம் கட்டியவர்கள் அமெரிக்கராக இருந்தாலும் அதேபோன்ற பொம்மையைச் செய்து அங்கு அனுப்புகிறவர்கள் ஜப்பானியராக இருக்கின்றனர்!

அமெரிக்காவில் பெரிய கார்கள் செய்யப்பட்டாலும், காரைப் போன்ற பொம்மைகளைச் செய்து அவற்றை அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்பவர்கள் ஜப்பானியர்கள்!

அமெரிக்காவில் பயன்படுத்திக் கழித்துக் கட்டப்படும் கார்களை நகருக்கு வெளியே கொண்டு போய் தள்ளிவிடுவார்கள். அந்தக் கார்களைப் பழைய இரும்பு விலைக்கு ஜப்பானியர் வாங்கி வந்து உருக்கி, சிறிய பொம்மைக் கார்களைச் செய்து அமெரிக்காவுக்கே அனுப்பி, பெருத்த இலாபமடைகிறார்கள்!

அமெரிக்கரும் அதேபோல் பொம்மைக் கார்களைச் செய்ய முடியும் என்றாலும், அமெரிக்கருக்கு ஆகும் செலவில் பாதிதான் ஜப்பானியருக்குச் செலவாகும். அந்த அளவுக்குச் செலவில் சிக்கனமாகவும், விலை குறைவு என்பதற்காகத் தரத்தில் தாழாமலும் சாமான்களை ஜப்பானியர்கள் செய்கிறார்கள்!

அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி என்னை வியக்கச் செய்தது என்றால், ஜப்பானின் தொழில் வளர்ச்சி என்னை உவக்கச் செய்தது!"

# அணுவிஞ்ஞானம் பற்றிய தமிழ் நூல்

## அமைச்சர் நெடுஞ்செழியன் வெளியிட்டார்

### பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் அரிய முயற்சி

பம்பாய், டிச. 9—
பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தினரால் வெளியிடப்பட்ட 'அணுவைப் பற்றி' என்ற தமிழ் நூலின் வெளிட்ட்டு விழா, வடக்குப் பம்பாயில் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழகக் கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இவ்விழாவுக்குத் தலைமைவகித்தார்.

இந்தியாவின் அணு இயல் விஞ்ஞானத்தின் தந்தையென்று புகழப்படும் காலஞ்சென்ற டாக்டர் ஹோமி ஜே. பாபாவின் பணியை நினைவுகூர்ந்து இந்நூல் அர்ப்பணிக்கப்பட்டது.

பம்பாய் டாக்டர் ஆர். என். குல்கர்னி, இந்த நூலின் முதற் பிரதியை, பாபாவின் தம்பியான ஜே. ஜே. பாபாவிடம் வழங்கினார்.

விழாவுக்குத் தலைமைதாங்கிய அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இளம் விஞ்ஞானிகள் சிலர் சேர்ந்து தமிழில் ஒரு விஞ்ஞான நூலை உருவாக்கியிருப்பது பாராட்டுக்குரிய முயற்சியாகும்.

"இம்மாதிரியான நூலை வெளியிட வேண்டுமெனில், எடுத்துக்கொண்ட விஷயத்தில் அனுபவ அறிவும், தமிழைக் கையாளுவதில் நல்ல திறமையும் உள்ளவர்களால்தான் அது இயலும்.

"இந்தத் தமிழ் நூல், தமிழர்களின் தாயகத்தில் அல்லாமல், மாராட்டிரத்தில் வெளியிடப்பட்டிருப்பது குறித்துப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

"சடினமான விஞ்ஞானப் பிரச்சினைகள் பற்றியே வட்டார மொழிகளில் நூல்கள் இயற்ற முடியுமென்றால், பிற துறைகளிலும் இதேபோல் வட்டார மொழிகளில் நூல்கள் ஏன் இயற்ற முடியாது என்பதற்குக் காரணம் எதுவும் இருப்பதற்கில்லை.

"விஞ்ஞானப் படிப்பில், சர்வதேச மொழியான ஆங்கிலத்துக்கு உள்ள முக்கியத்துவத்தை நாம் அனைவரும் உணர வேண்டும்; இருப்பினும், ஜப்பானைப்போல், இந்தியாவிலும் பொதுமக்களின் பயனுக்காக இந்த விஷயங்களை இந்திய மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும்.

"தமிழக அரசு கடந்த 3—4 ஆண்டுகளில் சுமார் 180 நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறது."

இந்நூலை வெளியிட்டு வைத்து அணுசக்தி குழுத் தலைவர் டாக்டர் விக்ரம் சாராபாய் பேசுகையில், 'விஞ்ஞானத் தகவல்கள் பற்றி வட்டார மொழியில் ஒரு நூலை இயற்ற விஞ்ஞானிகள் தாமாக முன்வந்து மேற்கொண்டுள்ள கூட்டுறவு முயற்சிக்கு இந்த நூல் ஓர் எடுத்துக்காட்டாகும்' என்றார்.

"ஒரு பொருளைப் புரிந்து கொண்டுவிடலாம்; ஆனால், அது பற்றி இத்தகைய நூல் ஒன்றை இயற்ற வேண்டுமெனில், அதில் ஈடுபடுபவர்களுக்குத் தனி ஊக்கம் இருந்தாக வேண்டும்; அது மிகவும் கடினமான பணியாகும்" என்றார்.

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் கே. கிருஷ்ணசாமி வரவேற்புரை நிகழ்த்துகையில், இந்நூலில் அணு விஞ்ஞானம் பற்றிய அறிமுகத்திலிருந்து, இந்தியாவின் அணுசக்தித் திட்டம் வரையுள்ள தகவல்கள் பற்றி 16 அத்தியாயங்கள் அடங்கியிருப்பதாகவும், இவற்றை 27 பேர் எழுதியதாகவும் கூறினார்; 'இது பம்பாய்த் தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள 3-வது நூலாகும்' என்றார்; '7 பேர் அடங்கிய பதிப்புக் குழு ஒன்று இடைவிடாமல் பாடுபட்டு இந்நூலை வெளியிட்டிருக்கிறது' என்றார்.

பம்பாயிலுள்ள விஞ்ஞானத் தமிழ் வளர்ச்சிக் கழக உறுப்பினர்கள்தான் இந்நூலை எழுதியுள்ளனர்; இந்தக் கழகம், 'விஞ்ஞான உலகம்' என்ற காலாண்டு பத்திரிகை ஒன்றும் வெளியிட்டு வருகிறது.

துணைத் தலைவர் வி. ஆதிகிருஷ்ணன் பேசுகையில், '27 மாணவ விஞ்ஞானிகள் அடங்கிய குழு ஒன்று ஐந்தாண்டுக் காலமாக இடைவிடாமல் பாடுபட்டு எழுதிய நூலாகும் இது' என்றார்; 7 நிபுணர்களின் ஆலோசனை அவர்களுக்குக் கிடைத்தது என்றும், பல தகுந்த தமிழ்ச் சொற்களை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 'குடும்ப நலத் திட்டம் பொருளாதாரக் கோட்பாடாகும்'

## அளவான குடும்பமே வளமான வாழ்வளிக்கும்

### வானொலியில் அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா உரை

'குடும்பக் கட்டுப்பாடு வார விழா'வையொட்டி, நலத்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், வானொலி மூலம் ஆற்றிய உரை வருமாறு:—

"குடும்பக் கட்டுப்பாடு என்பது, இருபதாம் நூற்றுண்டின் விஞ்ஞானப் புதுமையோ, மருத்துவ அற்புதமோ அல்ல; அது, நீண்ட நெடுங்காலமாக நிலைத்து வரும் பொருளாதாரக் கோட்பாடு ஆகும்.

உடல் நலம் -- மன நலம் -- செல்வ வளம் -- இவற்றை குறிக்கோளாகக் கொண்டிருப்பது குடும்பத் திட்டமாகும்.

மேற்கண்ட மூன்றும் முழுமையாகக் கிடைக்கவேண்டுமானால் திருமணமான தம்பதிகள் அனைவரும், மனநிறைவுடன் -- உறுதியுடன், குடும்பத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

நாடு முன்னேறுவதற்கு அடிப்படை அச்சாணி, குடும்பக் கட்டுப்பாடுதான்.

தெம்பும் தெளிவும் மிக்க நல்ல வாழ்வை நடத்திச் செல்லக் கூடிய அறிவறிந்த மக்களைப் பெற்றெடுத்து, திறமையாகக் குடும்பத்தை நடத்திச் செல்வதே பெற்றோரின் கடமை.

அளவான குடும்பம்தான் வளமாக வாழ முடியும்!

ஒரு குழந்தைக்கும் அடுத்த குழந்தைக்கும் மூன்று ஆண்டுகளாவது இடைவெளி இருக்க வேண்டும்; 'மூன்று குழந்தைகளே போதும்' என்று திட்டமிட வேண்டும்.

பாவேந்தர் பாரதிதாசன் 25 ஆண்டுகளுக்கு முன்பே, 'காதலுக்கு வழி வைத்துக் கருப்பாதை காக்க -- கதவொன்று கண்டறிவோம் -- இதில் என்ன குற்றம்?" என்று கேட்டார். புரட்சிக் கவிஞரின் விருப்பம் நிறைவேறும் வகையில் இன்று கதவுகளைக் கண்டறிந்து விட்டோம்."

# அந்தியூரில் அமைச்சர் முத்துசாமி

## ஊராட்சி ஒன்றியத்தின் வரவேற்பு--- பல நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

தமிழக அரசு உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தில், பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திரு. கே. கே. சுப்பிரமணியம் தலைமையில் வரவேற்பு விழாவும், விவசாயக் கிடங்குத் திறப்பு விழாவும் நடைபெற்றன.

விவசாயக் கிடங்கை அமைச்சர் திறந்து வைத்தார்.

சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரும் தமிழகக் கதர்--கிராமக் கைத்தொழில் ஆயத்தின் துணைத் தலைவருமான பி. எல். டரமசிவம், ஊராட்சி ஒன்றியத்தின் டிராக்டரை இயக்கி வைத்தார்.

அந்தியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ. எம். நடராசன், வள்ளுவர் படத்தைத் திறந்து வைத்தார்.

அமைச்சருக்கு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பிலும், ஒன்றிய மகளிர் நலக் குழுச் சார்பிலும், ஆசிரியர் கூட்டணியின் சார்பிலும், சீரணியின் சார்பிலும் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

பிறகு அமைச்சர் அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ளசிறந்த பள்ளிகளுக்கும், சிறந்த ஆசிரியர்களுக்கும், சிறந்த பள்ளித் தோட்டத்திற்கும், சிறந்த குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கினார்.

பவானி நில அடமான பாங்கி மூலம் அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தின் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ரூ. 2,82,000 கடன் தரப்பட்டிருந்தது; அதற்கான காசோலைகளை விவசாயிகளுக்கு அமைச்சர் வழங்கினார்; வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர் டி. கே. வெங்கடாசலம் நன்றி நவின்றார்.

பிற்பகலில் பச்சாம்பாளையம் ஊராட்சியைச்சேர்ந்த பள்ளிபாளையம் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழாவும், ஊராட்சி வரவேற்பும் நடைபெற்றன; ஊராட்சித் தலைவர் எஸ். முருக கவுண்டர் வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

அமைச்சர் அவர்கள் முதல் கட்டிடத் திறப்புவிழாவையும், பி.என். பரமசிவம் இரண்டாவது கட்டிடத்தையும், இ. எம். நடராசன் மூன்றுவது கட்டிடத்தையும் திறந்து வைத்தனர்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் பேசினார்.

### இயலுமா அவர்களால்?

**சுயநலத்தைத் துறந்து -- தாம் பிறந்த நிலைமையை உணர முடியாதவர்களுக்கு தொண்டு செய்யும் பாதையில் அடியெடுத்து வைக்க முடியாது!**

—காந்தியார்

# உழைப்பால்தான் நாட்டை உயர்த்த முடியும்

## இலவச நிலம் பெறும் உழவர்கட்கு அறிவுரை

அறந்தாங்கி, டிச. 10—

"ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்படுவது, அவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதற்கும், 'தரிசு நிலங்கள் பயனுள்ள நிலமாக மாற்றப்பட்டு அது பயன் தரத்தக்கதாக ஆகவேண்டும்' என்கிற நோக்கத்திலும்தான் தரப்படுகிறது.

"நிலத்தைப் பெற்றுக்கொண்டதற்குப் பின்னாலே சும்மா விட்டு விடுவதோ அல்லது வீணடித்துவிடுவதோ கூடாது; இதனால் அரசாங்கத்திற்கும் நாட்டுக்கும் எந்தவித நன்மையும் கிடையாது. விவசாயிகள் முனைந்து செயல்பட்டு உற்பத்தியைப் பெருக்கப் பாடுபட வேண்டும்.

"நிலச் சீர்திருத்தத்திற்கும், விவசாயத்திற்கும், கிணறு தோண்டுவதற்கும் அரசாங்கம் கடன் தருகிறது; அதைப் பெற்று -- எதற்காகப் பெற்றாரோ அதற்காகச் செலவு செய்யவேண்டும். அதைவிட்டுவிட்டு வேறு வழிகளில் செலவு செய்தல் கூடாது. உண்மையான பலன் பெருக வேண்டும் என்பதற்காகவே அரசாங்கம் இவ்வளவு சலுகைகளையும் செய்கிறது.

"இந்த நாடு வாழ -- வளர -- வளம் பெற -- கூட்டுறவு மிக முக்கியம் ஆகும். டென்மார்க் நாட்டில் ஒரு நபர் பல கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக இருக்கிறார்; அப்படி இருப்பதன் மூலம் கூட்டுறவு வளர ஆரம்பிக்கிறது. தனி நபரிடம் இருக்கும் 100 ரூபாயைக் கொண்டு எதுவும் செய்ய முடியாது; 15 நபர்களிடம் இருக்கும் 1500 ரூபாயைக் கொண்டு ஒரு பொத்தான் தொழிற்சாலையையாவது ஏற்படுத்திவிட முடியும்; ஆகவே மேலைநாடுகளைப் பின்பற்றி நாமும் கூட்டுறவுத் துறைகளை வளர்த்து, நமது நாட்டை உயர்த்தப் பாடுபட வேண்டும்.

"பொதுமக்கள் கோரிக்கைகள் கொடுத்தால் அதிகாரிகள் கால விரயம் செய்யாமல் உடனடியாகச் செயல்பட வேண்டும். இவற்றில் நேர்வழியை அதிகாரிகள் கடைபிடிக்க வேண்டும்; அப்போதுதான் இந்த நாடு முன்னேற்ற வழியிலேயே செல்ல வகையுண்டு.

"பஞ்சாபில் எந்தச் சீக்கியரும் பிச்சை எடுப்பதில்லை; காரணம், அவர்கள் அனைவருமே உழைப்பாளிகள்; உழைத்து முன்னேறுகிறார்கள். அந்த நிலையினை நமது நாட்டில் ஏற்படுத்த அனைவரும் மனத்தில் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்; நல்ல பணிகளை விரைந்து செயல்படுத்தும் உயரிய நோக்கம் ஒவ்வொருவர் மனத்திலும் ஏற்பட வேண்டும்."

**--அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்**

(இலவச நிலப் பட்டாக்கள் வழங்கு விழாவில்)

# ரூ. 1 கோடி கடன் திரட்ட மாநகராட்சி முடிவு

## வருவாய் வசதிகளைப் பெருக்கப் பயன்படும்

பொதுமக்களிடமிருந்து ரூ. 1 கோடி கடன் திரட்டுவது என்று சென்னை மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்துக்கு மாநகராட்சி தி.மு.க. தலைவர் வி. முனுசாமி பதிலளித்துப் பேசுகையில், 'இக்கடன் தொகை 10 ஆண்டுகளில் திருப்பி அளிக்கப்படும்' என்றும், ஆண்டுதோறும் வட்டியும் முதலுமாக ரூ. 12 இலட்சம் திருப்பியளிக்கப்படும்' என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் விளக்கிக் கூறியதாவது:—

"இக்கடன் தொகையைக் கொண்டு சூளையில் கொத்தவால்சாவடி போன்ற மற்றொரு மொத்த வியாபார அங்காடி கட்டப்படும்; மவுண்ட் ரோடில் பல அடுக்குகள் கொண்ட பெரிய கட்டிடம் கட்டி வாடகைக்கு விடப்படும்; எழும்பூர் 'கூட்ஸ்ஷெட்'டுக்கு எதிரிலும், நகரில் இன்னும் சிற்சில இடங்களிலும் கிடங்குகள், கடைகள் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்படும்.

"மாநகராட்சி எழுப்பும் இக்கடன் தொகை திருப்பியளிக்கப்படுவதற்குத் தமிழ்நாடு அரசு உத்தரவாதமளித்துள்ளது."

இதற்கு அடுத்து நடந்த மற்றொரு சிறப்புக்கூட்டத்தில் 1968—69-ம் ஆண்டுக்குக் குடிதண்ணீர் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 36 இலட்சம் ரூபாய்க்கு அரசாங்கத்திடம் கடன் கேட்பது என்ற யோசனையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேறியது.

'சென்னை மாநிலம்' என்றிருந்ததை மாற்றி, 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டப்பட்டதை வரவேற்றுப் பாராட்டும் தீர்மானமும் நிறைவேறியது.

# போர்க் கப்பல் சென்னை வருகை

## பொதுமக்கள் பார்வையிடலாம்

கடற்படை வார விழாவையொட்டி 'ரஞ்சித்' என்ற சண்டைக் கப்பல் டிசம்பர் 11-ம் நாள் சென்னை வந்துசேரும்.

சென்னையில் இக்கப்பல் ஐந்து நாட்கள் இருக்கும்.

டிசம்பர் 12, 13, 14 ஆகிய நாட்களில் காலை 9-மணியிலிருந்து மாலை 3-30 மணிவரை இக்கப்பலைப் பார்ப்பதற்கு மக்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

கப்பலைப் பார்ப்பதற்கு அனுமதிச் சீட்டுப் பெறவேண்டும்.

நாடு முழுவதிலும் டிச. 9-ம்நாள் முதல் 15-ம் நாள்வரை கடற்படை வாரம் கொண்டாடப்படுகிறது. டிச. 15-ம் நாள் கடற்படை நாளாக அனுசரிக்கப்படும்.

நாட்டைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதுடன், வேறு எந்த வகைகளில் கடற்படை உதவியாக இருக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்காகக் கடற்படை 'வாரம் கொண்டாடப்படுகிறது.

கல்வி-தொழிலமைச்சர்

# இரா. நெடுஞ்செழியன்

## சுற்றுப்பயணம்

டிச. 14 காலை 10 மணி: மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா உரையாற்றுதல்; 11-30: மதுரை மீனாட்சி உயர்நிலைப் பள்ளி புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டல்; 12-30: விளாங்குடி ஊராட்சி மன்றக் கட்டிடத் திறப்பு; மாலை 4: மதுரை மீனாட்சிக் கல்லூரி புதிய கட்டிடத் திறப்பு; 5-30: மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரி மாணவர் மன்றத்தில் பேச்சு; 6-30 தூய பிரிட்டோ உயர்நிலைப்பள்ளியின் புதிய கட்டிடத் திறப்பு; இரவு 7-30: மதுரை பொதுக்கூட்டம்.

# அறிஞர் அண்ணா

## சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள் :—

| | ரூ. காசு |
|---|---|
| நேற்றைய இதழ்த் தொடர்ச்சி | 21,330.68 |
| க. அன்பழகன் எம்.பி. | 500.00 |
| அமைச்சர் எஸ்.ஜே. சாதிக் பாட்சா | 500.00 |
| சென்னை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் ஆர் எம். வீரப்பன் | 500.00 |
| சட்டமன்ற தி.மு.க. கட்சிக் கொறடா து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ. | 251.00 |
| திருச்சி ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ. | 250.00 |
| சென்னை மாநகராட்சி உறுப்பினர் வசதை ஆர். கிருஷ்ணன் | 201.00 |
| திருச்சி திராவிடப் பண்ணை டி.வி. முத்துகிருஷ்ணன் | 101.00 |
| அம்பலூர் அர்ச்சுனன் (திரு. என்.வி.என். மூலம்) | 100.00 |
| கரூர் முதலமைச்சர் வளைவு விழாக் கமிட்டி சார்பாக -- அ. ஆறுமுகம் | 101.00 |
| குளித்தலை மீ.சு. இளமுருகு பொற்செல்வி | 101.00 |
| சென்னை-1 மாணவர் மன்றம் | 100.00 |
| கோவை அவினாசி ரோடு கே. இராமதாசு | 100.00 |
| சென்னை-13 சி.ஜி. காலனி கலைஞர் கருணாநிதி நற்பணி மன்றம் | 50.50 |
| கடலூர் நகராட்சி உறுப்பினர் கே. தண்டபாணி | 51.00 |
| ஈரோடு தமிழக மின்வாரிய அலுவலகத்தின் கூத்தரசு நண்பர்கள் | 35.00 |
| மாயூரம் -- கூறைநாடு கவிஞர் ஆனந்தம் | 25.00 |
| தஞ்சை - கீழவாசல் ஏ.வி. பதி | 25.00 |
| நீடாமங்கலம் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும் அலுவலர்களும் | 26.00 |
| அத்திப்புலியூர் மு. பிச்சையன் | 25.00 |
| அரியலூர் பி. பழனிசாமி பி.ஏ.,பி.எல். | 25.00 |
| ஆத்தூர (சேலம்) என். கோவிந்தசாமி நாயுடு | 25.00 |
| சேலம்-1 கடைவீதி ஏ. முருகேசன் | 25.00 |
| சென்னை-20 வழக்கறிஞர் டி. சத்தியதேவ் | 25.00 |
| ஈரோடு அ. இராதாகிருஷ்ணன் | 20.00 |
| குடந்தை 17-வது வட்டார உட்கிளைச் சார்பாக— ந. இராமமூர்த்தி | 17.00 |
| சென்னை-28 குறுக்குத் தெரு கோ. சிதம்பரம் புஷ்பாவதி | 15.25 |
| நாகர்கோயில் - கோட்டாறு எஸ். பாலசுப்பிரமணியன் | 11.00 |
| ஒட்டன்சத்திரம் மா. அப்பு | 11.00 |
| அறந்தாங்கி சுப. வேலவன் | 11.00 |
| திருவனந்தபுரம் - சாலை இரா. இராசகோபால் | 11.00 |
| மதுரை 37-வது வட்டாரக் கிளை கே.எஸ்.பி. சங்கரலிங்கம் | 10.00 |
| மாதனூர் பஞ்சாயத்துத் தலைவர் கே. பஞ்சாட்சரம் | 10.00 |
| சின்னமனூர் எஸ். பாண்டியன் | 10.00 |
| சின்னாளப்பட்டி ஏ.எம்.டி. நாச்சியப்பன் | 10.00 |
| மதுரை-1 இரா. பெரியநாயகம் | 10.00 |
| திருச்சி-8 அ. அப்துல் சுபான் | 10.00 |
| இடையூர் உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர்கள் | 10.00 |
| சென்னை-23 எம். பொன்னையா | 10.00 |
| சென்னை செ. அ. காதர் | 10.00 |
| ஆலந்தூர் நகர தி.மு.க. கிளைச் செயலாளர் எம் ஆபிரகாம் | 11.00 |
| கோவை டி.எஸ். கிருஷ்ணமாச்சாரி | 10.00 |
| ஆலந்தூர் 18-வது வார்டு கிளைச் செயலாளர் ஈ. அரங்கநாதன் | 5.00 |
| ஆதம்பாக்கம் கருணாநிதி நற்பணி மன்றச் செயலாளர் மாதவன் | 5.00 |
| ஆருசுத்திப்பட்டு எஸ். செகதீசன் | 5.00 |
| ,, முத்து. உத்திராபதி | 5.00 |
| சென்னை-1 ம.கி. சுப்பிரமணியம் | 5.00 |
| சென்னை-5 பி. தண்டபாணி பி.ஈ.,எம்.எஸ்சி. | 5.00 |
| சென்னை-5 வடுவூர் கி. செங்குட்டுவன் | 5.00 |
| ஏ-கலையம்புத்தூர் க. சின்னத்துரை | 5.00 |
| சேலம்-6 பி. சீனிவாசன் | 5.00 |
| தாண்டவராயபுரம் டி. துரைசாமி | 5.00 |
| தரணிக்கோட்டம் க. சிதம்பரன் | 5.00 |
| ஒட்டன்சத்திரம் ச. வடிவேல் | 5.00 |
| ஆத்தூர் - கஸ்பா எஸ். வெங்கடாசலம் | 5.00 |
| சிவகாசி ஏ.ஆர். ராசமணி | 5.00 |
| திருநெல்வேலி-2 எம். அப்துல் குலாம் | 5.00 |
| சிவகாசி கே.எஸ். காளிராசன் | 5.00 |
| இராமநாதபுரம் நீ நடராசன் | 5.00 |
| குணசீலம் டி. பொன்னுசாமி | 5.00 |

ரூ. 3 வீதம் அளித்தோர் :

சிவகங்கை மா. பாண்டியன், சீர்காழி கொ. செயராமன், சென்னை-24 செல்வி வி. கலைச்செல்வி, சென்னை-21 கே. சீனிவாசன் ஆகிய 4 பேர் — 12.00

ரூ. 2 வீதம் அளித்தோர் :

விராலிமலை இரா. மாணிக்கம், உத்தமபாளையம் பொன் பகவதி, தேவகோட்டை பழ. இளங்கோ, தேவகோட்டை புலவர் மறைமுதல்வன், தேவகோட்டை கு. அன்புச்செழியன், மங்கலல்லூர் பசார் ஆர். சுப்பிரமணியன், சென்னை-7 ஏ. பால், சென்னை-24 வி. எழில் அரசன் ஆகிய 8 பேர் — 16.00

ரூ. 1 வீதம் அளித்தோர் :

கீழையூர் செ. திருமேனி (1.01), தஞ்சாவூர் ஆர்.வி. ஐயர், சின்னாளப்பட்டி ஏ.எம்.டி. கோபாலகிருஷ்ணன், நாச்சியார்கோயில் வி.கே. இராமசாமி, திருவாரூர் எம். தியாகராசன், ஏனங்குடி மு. அப்துல் ரசாக் ஆகிய 6 பேர் — 6.01

ஆக மொத்தம் — 24,804.44

நிதி அனுப்ப வேண்டிய முகவரி :—

மு. கருணாநிதி, பொருளாளர்,

தி.மு.க. தலைமை நிலையம், இராயபுரம், சென்னை-13

# முதலமைச்சர் அண்ணா தெளிவுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதென்று இதன் ஆரம்பக் கட்டத்தில், சட்டமன்றத்தில் எடுத்துரைத்த போதும், அறிக்கைகள் விடுத்தபோதும் குறைகள் காண எவரும் முன்வரவில்லை.

இதில் உள்ள இயற்கை நீதியை அப்போது அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆனால், முதலிரண்டு சீட்டுக் குலுக்கல்கள் முடிந்து அரசுக்குப் பல இலட்சம் ரூபாய் கிடைத்தது என்று தெரிந்ததும், கண்டனங்களைப் பொதுக்கூட்டங்களில் பேசியும், பத்திரிகைகளில் எழுதியும் வருகிறார்கள்.

## உள்ளத்தில் உள்ள அழுக்காறே காரணம்

கேரளமும், அரியானாவும், மேற்கு வங்கமும் இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை மேற்கொண்டிருக்கின்றன என்பதோடு, மகாராட்டிர மாநிலம் பரிசுச் சீட்டுத் திட்டத்தை நடத்த விரும்பியுள்ளதாயும் -- உயர்நிலை அதிகாரி ஒருவரை அனுப்பி அதுபற்றி பரிசீலித்து வரும்படிச் சொல்ல எண்ணியுள்ளதாயும் அறிகிறோம்; மேலும் சில மாநிலங்களிலும் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

அங்கெல்லாமில்லாத எதிர்ப்பு இங்கு மட்டும் இருக்கிறது; அந்த அளவுக்கு இப்பரிசுச் சீட்டுத் திட்டம் அவர்களைக் கவர்ந்துள்ளது; அவர்களை உறுத்துகிறது; ஆகையினால் அவர்கள் கண்டனம் தெரிவிக்கிறார்கள்.

பரிசுச் சீட்டுத் திட்டத்தை, 'சூதாட்டம்' என்கிறார்கள்; புதிதாகக் கள்ளுக்கடைகளைத் திறந்துவிட்டு, அவற்றின்முன் நிற்கின்ற நீண்ட 'கியூ' வரிசைகளைப் படம் பிடித்துப் போட முடியாதவர்கள், பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் குறைகூற முற்பட்டிருக்கிறார்கள்! இது, அவர்கள் உள்ளத்தில் உள்ள அழுக்காற்றைக் காட்டுகிறதே தவிர, தூய்மையைக் காட்டிடவில்லை!

## எந்தநிலையில் அவர்கள் குறைகூறமுனைகின்றனர்?

பல்வேறு நிலைகளில் உள்ளவர்கள் பலவேறு நேரங்களில் என்னைத் தனியே சந்தித்து, இம்மாநிலத்தில் கள்ளுக் கடைகளைத் திறந்தால் நல்ல வருவாய் கிடைக்கும் என்றார்கள்; நான் நிச்சயம் அதற்குப் பலியாக மறுத்துவிட்டேன்.

அப்படி உறுதியாக இருந்த என்னைப் பாராட்ட ஒரு வார்த்தை கூறாத இவர்கள், இன்றையத் தினம் இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் குறைகூறத் துணிகிறார்கள்! தமிழ்நாட்டில் நடக்கும் தி. மு. க. ஆட்சி எதைச் செய்தாலும்--எதைச் சொன்னாலும் எதிர்ப்பதென்னும் கொள்கையைக் கடைபிடிககிறார்கள்!

## முறையானதுமல்ல-நேர்மையுமன்று!

'இராஜாஜியே எதிர்ப்புத் தெரிவித்துருககிறார்' என்கிறார்கள்; அவர் சொல்லுவது தமிழ்நாட்டுக்கு மட்டுமலல -- இந்த நாடு முழுவதற்குமாகவே சொல்லுகிறார்.

அந்தப் பெரியவரது நல்லுரையை மேற்கொண்டு எல்லா மாநிலங்களும் பரிசுச் சீட்டுத்திட்டத்தை நிறுத்துமானால், அடுத்த நிமிடமே இங்கும் பரிசுச் சீட்டுத் திட்டத்தை நிறுத்துவோம்!

அது அல்லாமல், இங்கு நடக்கின்ற காரியங்களை மட்டும் எதிர்ப்பதென்பது முறையுமல்ல -- நேர்மையுமல்ல -- அரசியலுமாகாது!

## தமிழக அரசின்நோக்கம் தூய்மைமிக்கது!

பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் குறை கூறுகின்றவர்களும்கூட குலுக்கலுக்கு நாம் வகுத்துக் கொண்டுள்ள முறையை, 'தூய்மையற்றது' என்று கூறவில்லை. அவர்களுக்கு இம்முறை கிடைக்கவில்லை என்றால், அடுத்த முறை -- அதற்கடுத்த முறை கிடைக்குமென்று மன ஆறுதல் பெறட்டும்! இலவு காத்த கிளிபோல் ஆகவேண்டாம்!

**தமிழக அரசின் வருவாய்த் துறையைப் பொறுத்தவரையில், மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய வசதிகளும், அவற்றுக்குச் செலவிடப்பட வேண்டிய தொகையின் அளவும் வளர்ந்து வருகின்றன.**

**நம் மக்களிடத்தில் இனி வரி போட முடியாது; ஏற்கனவே போடப்பட்டுள்ள வரிகள் மக்களை வாட்டி வதைப்பன என்பதை -- நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவன் என்கிற முறையில் -- நானறிவேன்; வசதிகளைப் பெருக்காமல் மேலும் வரிகளைப் போடுவதென்பது சமூக நீதியாகாது!**

**வரிகள் மூலம் நமக்குக் கிடைக்கின்ற வருவாய் -- திட்டத்துக்காக மத்திய அரசு கொடுக்கின்ற நிதி ஆகியவற்றில் பெரும் பகுதி -- நீர்ப்பாசனம், மின்சாரத்துறை ஆகியவற்றுக்குச் சென்றுவிடுகின்றன; மீதமுள்ளதைக் கொண்டு நலத்துறை, கல்வி மற்றும் சுகாதாரத்துக்குச் செலவிட முடியவில்லை.**

**மருத்துவ நிலையங்கள் இருந்தால் அவற்றுக்குக் காற்றோட்டமான கட்டிடங்கள் இல்லை -- மருத்துவர்கள் இருந்தால் நர்சுகள் இல்லை --- மருத்துவர்களும் நர்சுகளும் இருந்தால் போதுமான சம்பளம் இல்லை என்ற நிலை இருந்துவருகிறது.**

**நல்ல மருத்துவமனைகளும், பள்ளிகளும், இன்ன பிற புதிய வசதிகளும் ஏற்பட -- ஆசிரியர்கள் நல்வாழ்வு பெற்றிட -- மருத்துவர், செவிலியர் போன்றோர் வாழ்க்கைத் தரம் உயர -- பரிசுச் சீட்டுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் பணம் பயன்படக் கூடும்! இந்த நோக்கம் தூய்மையானது!**

'பரிசு கிடைக்காவிட்டால் போகிறது; அண்ணா அரசுக்கு ஒரு ரூபாய் கொடுக்கிறோம்' என்கிறார்கள் சிலர்; நானும் இந்த அரசின் ஒரு அங்கம்தான்; நான் இன்று இருக்கலாம்;

வேறு ஒருவர் நாளை வரலாம்; அரசு என்பது நிலையானது; எனவே, 'வந்தால் பரிசு வரட்டும்; வராவிட்டால் நல்ல காரியங்களுக்குப் பயன்படட்டும்' என்று எண்ணியே பரிசுச் சீட்டுக்களை வாங்கவேண்டும்' என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

## சேலத்தில்

அண்ணா சிகிச்சை நிதி

# சிறப்புக் கூட்டம்

★

**12-12 68 மாலை 6 மணிக்கு**

**நேரு கலை அரங்கத்தில்**

புரட்சி நடிகர்

**எம்.ஜி. இராமச்சந்திரன்** எம்.எல்.ஏ.

**க. இராசாராம்** பி.ஏ., எம்.பி.

ஆகியோர் பேசுவர்.

நன்கொடை : ரூ. 10; 5; 2; 1.

—கூட்ட அமைப்பு :
சேலம் மாவட்ட தி. மு. க.

## பொதுக்கூட்டங்கள்

**11--12--68**

**பரவாய்**

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர் : எல். ஆர். கோவிந்தராசன்; பேசுவோர் : இரா. நாராயணன் எம்.எல்.ஏ., என். டி. அப்துல்சமது, அ. சு. ஆறுமுகம், கே. எஸ். அன்பரசன், ஆ. கோவிந்தன், வைலோதிதாசன், எம். சி. மருதமுத்து.

பொதுப்பணி அமைச்சர்

## மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

டிச. 11: காலை 7-30 மணி : செம்பனார் கோவில்; 10-30 மணி : எடமேலையூர்; மாலை 4 மணி : மன்னார்குடி; 7 மணி : தஞ்சாவூர் பொதுக்கூட்டம்.

டிச. 12 : கரூர் டி. என். இராசரத்தினம் நினைவு நாள் விழாவில் பங்கேற்பு.

வேளாண்மை அமைச்சர்

## ஏ. கோவிந்தசாமி

நிகழ்ச்சிகள்

டிச. 11: மாலை 3 மணி : ஆனைமலை—ஊராட்சி ஒன்றிய கட்டிடத் திறப்பு விழா; விவசாயக் கிடங்கு, கட்டிடத் திறப்பு விழா; மகளிர் மன்றம் அடிக்கல் நாட்டு விழா; மாலை 4-30 மணி : அமெரிக்க அமைதிக் குழுவின் விவசாய வேலைகளைப் பார்வையிடல்; மாலை 5-30 மணி : அர்த்தனாரிபாளையம்—சீரணியினரால் கட்டப்படும் பள்ளிக்கூடக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல்; மாலை 6-30 மணி : கஞ்சம்பட்டி—சீரணியினரால் கட்டப்படும் பள்ளிக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல்.

உள்ளாட்சி அமைச்சர்

## மா. முத்துசாமி

சுற்றுப்பயணம்

டிச. 11 : காலை 9 மணி : தொரவலூர்; சீரணியினரால் மேற்கொள்ளப்படும் துவக்கப் பள்ளிக் கட்டிடப் பணியைத் துவக்கிவைத்தல்; 11 மணி : நெல்லி கவுண்டன் புதூர்—சீரணியினரால் கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடத்தைத் திறந்து வைத்தல்; மாலை 4 மணி : ஆனைமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடத் திறப்பு விழா; மாலை 7 மணி : பொள்ளாச்சி—பொது வரவேற்பு.

ரோஜா
பாக்கு &
புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13, ஆசிரியர் வெளியிடப்படுகிறது.